யானமெய்ஞ்ஞானசம்பந்தன்சொல்லிய
ஊனமில்மொழிவலார்க்குயருமின்பமே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-சற்குணலிங்கேசுவரர்-தேவியார்-சர்வாலங்கிருதமின்னம்மை.
ஆடுதிகம்-உக.

(திருப்பஞ்சாக்கரப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.)
திருச்சிற்றம்பலம்.

நஞ்சணுந்தஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகமைந்துநினைமினுடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (க)

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. (உ)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினேயேற்றிநன்புலத்
தேனவழிதிறந்தேத்துவார்க்கிட
ராணகெடுப்பனவைத்தெழுத்துமே. (௬)

நல்லவர்தீயொடுநச்சினர்
செல்லல்கெடச்சிவமூத்திகாட்டுவ
கொல்லநமன்றமர்கொண்டுபோயிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே. (௭)

கொங்கலர்வனமதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சுவம்பொழிற்
றங்கரவின்படமஞ்சுநஞ்சம்மூழை
யங்கையிலேவிரலஞ்செழுத்துமே. (௮)

தும்மலிருமலொடுர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. (௯)

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாநட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே. (௰)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன்பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவாக்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (௰௧)

கார்வணனுன்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (௰௨)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. (௰௩)

நற்றமிழ்ஞானசம்பந்தனுன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலைமீறைத்துமஞ்செழுத்
தற்றனவல்லவரும்பராவரே. (யத)

திருச்சிற்றம்பலம்.

(திருவிற்கோலம்-பண்-காந்தாரபஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

உருவினுருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினுன்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெருண்டுநோக்கிய
செருவினுறைவிடந்திருவிற்கோலமே. (க)

சிற்றிடையுமையொருபங்கனங்கையி
லுற்றதோரெரியினெருசரத்தினுல்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (உ)

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனுர்வண்ணம்வண்ணவான்
பையரவல்குலாள்பாகமாகமூழ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. (ங)

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலினை
யுதைத்தவனுயிரிழந்தருண்டிவீழ்ந்தரப்
புதைத்தவனெடுநகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (ச)

மூந்தினுன்மூவருண்முதல்வனுயினுன்
கொந்துலாமலர்ப்பொழிற்கூகமேவினு
னந்திவான்பிறையினுண்டியர்மேல்விடை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. (ஞ)

தொருத்தவனருமறையங்கமாகமம்
வருத்தவன்வளர்பொழிற்கூகமேவினுன்
மிருத்தவன்மிருத்தவர்புரங்கள்வெந்தறச்
செருத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (ஈ)

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந்
தரித்தவன்றரியலர்புரங்களாசற
வெரித்தவனிலங்கையர்கோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (எ-ம்)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையில்வைத்தவ
னரியொடுபிரமனறற்றலாலுருத்
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே. (ஈ)

சீர்மையில்சமணெடுசீவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதேநசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்தருள்கிடுஞ்
சீர்மையினுடந்திருவிற்கோலமே. (ஏ)

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடஞ்செழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லதமிழ்ஞானசம்பந்தன
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. (ஐ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமியெயர்-புராந்தகேசுவரர்-தேவியார்-புராந்தரியம்மை

இத்தத்தலம்-கூவமெனவழங்கப்படுகின்றது.

(திருக்கழுமலம்-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைக லு
மெண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவிலைக்
கண்ணினல்லநீதுறங்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே. (க)

போதையார்பொற்கிண்ணத்தடிகில்பொல்லாதனைத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார்குழையினன்கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும்பெருந்தகையிருந்ததே. (உ)

தொண்டணைசெய்தொழிற்றுயரறுத்துய்யலாம்
வண்டணைகொன்றையான்மதுமலர்ச்சடைமுடிக்
கண்டணைநெற்றியான்கழுமலவளநகர்ப்
பெண்டணையாகவோர்பெருந்தகையிருந்ததே. (க)

அயர்வுளோமென்றுநீயசைவொழிநெஞ்சமே
நியர்வளைமுன்கையாணேரிழையவளொடும்
கயல்வயல்சூழ்திகொளுங்கழுமலவளநகர்ப்
பெயர்பலதுதிசெயப்பெருந்தகையிருந்ததே. (ச)

அடைவிலோமென்றுநீயயர்வொழிநெஞ்சமே
விடையமர்கொடியினல்விண்ணவர்தொழுதெழுங்
கடையுயர்மாடமார்கழுமலவளநகர்ப்
பெடையனநடையொடும்பெருந்தகையிருந்ததே. (ஞ)

மற்றொருபற்றிலெநெஞ்சமேமறைபல
கற்றநல்வேதியர்கழுமலவளநகர்ச்
சிற்றிடைப்பேரல்குற்றிருந்திழையவளொடும்
பெற்றெனையாளுடைப்பெருந்தகையிருந்ததே. (ட)

ஞறைவளவயலொழிஞறைவொழிநெஞ்சமே
நிறைவளைமுன்கையாணேரிழையவளொடுங்
கறைவளர்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிறைவளர்சடைமுடிப்பெருந்தகையிருந்ததே. (ண)

அரக்கனரருவரையெடுத்தவனலறிட
நெருக்கினுவிரலினனீடியாழ்பாடவே
கருக்குவாளருள்செய்தான்கழுமலவளநகர்ப்
பெருக்குநீரவளொடும்பெருந்தகையிருந்ததே. (அ)

நெடியவன்பிரமனுநினைப்பரிதாயவ
ரடியொடுமுடியறியாவழலுருவினன்
கடிகமழ்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிடிநடையவளொடும்பெருந்தகையிருந்ததே. (கூ)

தாருறுதட்டைச்சமணர்சாக்கியர்கட
மாருறுசொற்களைந்தடியிணையடைந்துய்ம்மின்
காருறுபொழில்வளர்கழுமலவளநகர்ப்
பேரறத்தாளொடும்பெருந்தகையிருந்ததே. (எ)

கருந்தடந்தேன்மல்குகூழமலவளநகரிப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
விரும்புவரவர்கள்போய்விண்ணுலகாள்வரே. (ய௪)

திருச்சிற்றம்பலம்.

(திருத்தேவன்குடி-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண்டில்லிலைமந்திரங்கள்ளிலை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்கள்ளிலை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
வருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. (க)

வீதிபோக்காவனவினையைவிட்டுய்வன
வோதியோர்க்கப்படாப்பொருளையோர்விப்பன
தீதிலேறவன்குடித்தேவர்தேவெய்திய
வாதியத்தம்மிலாவடிகள்வேடங்களே. (உ)

மானமாக்குவ்வனமாகுநீக்குவ்வன
வானையுள்கச்செலும்வழிகள்காட்டுவ்வன
தேனும்வண்டும்மிசைபாடுந்தேவன்குடி
யானஞ்சாடும்முடியடிகள்வேடங்களே. (ங)

செவிகளார்விப்பனசித்தையுட்சேர்வன
கவிகள்பாடுவ்வனகண்குளிர்விப்பன
புவிகள்பொங்கப்புனல்பாய்ந்தேவன்குடி
யவிகளுய்க்கப்படுமடிகள்வேடங்களே. (ச)

விண்ணுலாவுந்நெறிவீடுகாட்டுந்நெறி
மண்ணுலாவுந்நெறிமயக்கந்தீர்க்குந்நெறி
தெண்ணிலாவெண்மதிதீண்டுதேவன்குடி
யண்ணலானேறுடையடிகள்வேடங்களே. (ஞ)

பங்கமென்னப்படாபழிகளென்னப்படா
புங்கமென்னப்படாபுகழ்களென்னப்படுந்
திங்களோயும்பொழிதீண்டுதேவன்குடி
யங்கமாறுஞ்சொன்னவடிகள்வேடங்களே. (ஃ)

கனாதலொன்றும்மிலேகருதவல்லார்தமக்
குனாயிலானம்மிலையுலகினின்மன்னுவர்
தினைகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
யரையில்வெண்கோவணத்தடிகள்வேடங்களே. (எ)

உலகமுட்குந்திறலுடையரக்கன்வலி
விலகுபூதக்கணம்வெருட்டும்வேடத்தினன்
நிலகமாரும்பொழில்சூழ்ந்ததேவன்குடி
யலர்தயங்கும்முடியடிகள்வேடங்களே. (அ)

துளக்கமில்லாதனதூயதோற்றத்தன
விளக்கமாக்குவ்வனவெறிவண்டாரும்பொழி
றிளேக்குந்தேவன்குடித்திசைமுகனேமிமா
லளக்கவொண்ணுவண்ணத்தடிகள்வேடங்களே. (கூ)

செருமருதண்டிவர்த்தேரமணர்சீ
ரருமருவப்படாதொழும்பர்தமூரைகொளே
றிருமருவும்பொய்கைசூழ்ந்ததேவன்குடி
யருமருந்தாவனவடிகள்வேடங்களே. (ஙி)

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றனை
மாடமோங்கும்பொழின்மல்குகண்காழியா
னடவல்லமிதமிழ்ஞானசம்பந்தனற்
பாடல்பத்தும்வல்லார்க்கில்லையாம்பாவமே. (ஙி)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-கர்க்கடகேசுவரர்-தேவியார்-அருமருந்தாயியம்மை.

(திருக்காணப்பேர்-பண்-கொல்லி.)
திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினல்வழிபமிங்
கடியுலாம்பூம்பொழிற்காணப்பேரண்ணனின்
னடியலாலடைசரணுடையரோவடியரே. (க)

நண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாரோயோர்பாகமாப்பேணினுன்
கண்ணுடைநெற்றியான்கருதியகாணப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதல்கருமமே. (உ)

வாவிவாய்த்தங்கியதுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலே
நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றுட்டுவார்தொண்டரே. (ங)

நிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற்களிலிலார்குற்றமே. (ச)

ஏனப்பூண்மார்பின்மேலென்புபூண்டிலா
ஞானப்பேராயிரம்பேரிளணண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்தீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (ஞ)

பள்ளமேபடர்சடைப்பாற்படப்பாய்த்தநீர்
வெள்ளமேதாங்கினன்வெண்மதிசூடினன்
கள்ளமேசெய்கிலார்கருதியகானப்பே
ருள்ளமேகோயிலாவுள்குமென்னுள்ளமே. (ட)

மானமாமடப்பிடிவன்கையாலலங்கிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினி லுறபிணிகெடவென்னிலீ
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே. (ண)

வாளினுன்வேலினுன்மால்வரையெடித்தநின்
டோளினுனெடுமுடிதொலையவேயூன்றிய
தாளினுன்கானப்பேர்தலையினுல்வணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (அ)

சிலையினுன்மூப்புரத்தீயெழச்செற்றவ
னிலையிலாவிருவரைநிலைமைகண்டோங்கினுன்
கலையினுர்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினுல்வணங்குவார்தவமுடையார்களே. (கூ)

உறித்தலிச்சுரையொடுருண்டிலைகபிடித்துச்சி
பறித்தலும்பேர்த்தலும்பயனிலப்பாவிகாண்
மறித்தலிமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்ணதொழல்கருமமே. (ஙு)

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழிபா
ணாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாட்பாவமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-காளீசுவரர்-தேவியார்-மகமாயியம்மை.
இத்தலம் - காளையார்கோவிலென்று வழங்கப்படுகின்றது.

(திருச்சக்கரப்பள்ளி-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

படையினர்வெண்மழுப்பாய்புலித்தோலரை
யுடையினருமையொருகூறனூர்வதோர்
விடையினர்வெண்பொடிப்பூசியார்விரிபுனற்
சடையினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (க)

பாடினாருமறைபனிமதிசடைமிலைச்
சூடினார்படுதலையுன்னெருக்கதனெடு
நாடினாரிடபலிநண்ணியேரர்காலனைச்
சாடினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (உ)

மின்னினார்சடைமிசைவிரிகதிர்மதியமும்
பொன்னினார்கொன்றையும்பொறிகிளரரவமுந்
துன்னினாருலகெலாந்தொழுதெழநான்மறை
தன்னினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (ங)

நலமலிகொள்கையார்நான்மறைப்பாடலார்
வலமலிமழுவினர்மகிழ்மூர்வண்டறை
மலர்மலிசலமொடுவந்திழிகாவிரி
சலசலமணிகொழிசக்கரப்பள்ளியே. (ச)

வெந்தவெண்பொடியணிவேதியர்விரிபுன
லந்தமிலணிமலிமங்கையோடமருமூர்
கந்தமார்மலரொடுகாரகிற்பன்மணி
சந்திநேடணைபுனற்சக்கரப்பள்ளியே. (ஞ)

பாங்கினன்மூப்புரம்பாழ்படவெஞ்சிலை
வாங்கினர்வானவர்தானவர்வணங்கிட
வோங்கினருமையொருகூறெடுமொலிபுன
றூங்கினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (ட)

பாரினார்தொழுதெழுபரவுபல்லாயிரம்
பேரினார்பெண்ணெருகூறனார்பேரொலி
நீரினார்சடைமுடிநிறைமலர்க்கொன்றையர்
தாரினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (எ)

மூதிரிலாவோர்பிறைசூடினார்மூன்னரா
ரெதிரிலாநூப்புரமெரிசெய்தார்வரைதனு
லதிரிலாவல்லரக்கன்வலிவாட்டிய
சதிரினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (அ)

தணிபடுகோவணஞ்சுண்ணவெண்பொடியினர்
பணிபடுமார்பினர்பனிமதிச்சடையினர்
மணிவணனவலெடுமலர்மிசையானையுந்
தணிவினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (கூ)

உடம்புபோர்சேவரூண்டொழிற்சடணர்கள்
விடம்படுமுரையவைமெய்யலவிரிபுனல்
லுடம்படுமலர்கொடுவணங்குபின்வைகலுந்
தடம்புனல்சூழ்தருசக்கரப்பள்ளியே. (ஙு)

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெந்
தண்ணுதலவனடிதழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொற்
பண்ணியவிவைசொலப்பறையுமெப்பாவமே. (ஙச)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆலந்துறையீசுவரர்-தேவியார்-அல்லியங்கோதையம்மை.

சக்கரப்பள்ளியினிற்சார்ந்த அல்லியங்கோதை, சொற்றெங்குமாலந்துறையானே என்னுஞ் சிவநாமப்பரிறெடையானு முணர்க.

(திருமழபாடி-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

காலியார்வண்டினங்கிண்டியகாரூறு
சோலியார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலியார்விடமணிவேதியன்விரும்பிட
மாலியார்மதிதவழ்மாமழபாடியே. (எ)

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினத்தூமலர்தூதைபவே
மறையணிநாவினன்மாமழபாடியே. (உ)

அந்தணர்வேள்வியுமருமறைத்தூமனியுஞ்
செந்தமிழ்க்கீதமுஞ்சிரிஞல்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட
மந்தம்வந்தலவுசீர்மாமழபாடியே. (ஙி)

அத்தியினுரிதனையபழகுறப்போர்த்தவன்
மூத்தியாய்மூவரின்முதல்வனுய்நின்றவன்
பத்தியாற்பாடிட்பரிந்தவர்க்கருள்செயு
மத்தனருறைவிடமணிமழபாடியே. (சி)

கங்கையாரிசடையிடைக்கதிர்மதியணிந்தவன்
வெங்கண்வாளரவுடைவேதியன்தீதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட
மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. (ஙீ)

பாலனுராருயிர்பாங்கினுலுணவருங்
காலனுருயிர்செகக்காலினுற்சாடினன்
சேலினர்கண்ணினுடன்னெடுஞ்சேர்விட
மாலினர்வழிபடுமாமழபாடியே. (சு)

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே
யெண்ணிலார்மூப்புமரியுணதகைசெய்தார்
கண்ணினுற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம்
மண்ணலாருறைவிடமணிமழபாடியே. (எ)

காத்தினுற்கயிலையையெடுத்தகாரரக்கன
சிரத்தினீடூன்றலுஞ்சிவனடிசரணென
விரத்தினுற்கைதந்தாம்பெடுத்திசைபாடலும்
வரத்தினன்மருவிடமாமழபாடியே. (அ)

ஏடுலாமலர்மிசையயனெழின்மாலுமாய்
நாடினர்க்கரியசீர்நாதனுறைவிடம்
பாடலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழின்
மாடலாமல்குசீர்மாமழபாடியே. (கூ)

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணைடசாக்கியர்
நெறிபிடித்தறிவிலாநீதர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணைனக்கொண்டுமான்
மறிபிடித்தானிடமாழபாடியே. (ம)

ஞாலத்தாசாதிநாளினுடொறுஞ்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்பிக்கசீர்ஞானசம்பந்தன்சொற்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. (ய)

திருச்சிற்றம்பலம்.

(மேலைத்திருக்காட்டுப்பள்ளி-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

வாருமன்னும்முலைமங்கையோர்பங்கின
னூருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுஞ்சடைநிமலர்தந்நீர்மையே. (க)

நிருத்தனர்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
யருத்தனரழகமர்மங்கையோர்பாகமாப்
பொருத்தனர்கழலிணைபோற்றுதல்பொருளதே. (உ)

பண்ணினரருமறைபாடினர்நெற்றியோர்
கண்ணினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
விண்ணினர்விரிபுனன்மேவினர்சடைமுடி
யண்ணலாரெம்மையாளுடையவெம்மடிகளே. (ங)

பணங்கொளரவம்மரைக்கார்ப்பதுபலபலி
யுணங்கலோடின்கலனுறைவதுகாட்டிடை
கணங்கள்கூடித்தொழுதேத்துகாட்டுப்பள்ளி
நிணங்கொள்சூலப்படைநிமலர்தந்நீர்மையே. (ச)

வரையுலாஞ்சந்தொடுவந்திழிகாவிரிக்
கரையுலாமிமணல்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
திரையுலாங்கங்கையுந்திங்களுஞ்சூடியங்
கரையுலாங்கோவணத்தடிகள்வேடங்களே. (ஞ)

வேதனர்வெண்மழுவேந்தினரங்கமுன்
னாதினருமையொருகூறுகொண்டுழைக்
காதினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நாதனர்திருவடிநாளுநின்றேத்துமே. (சு)

மையினர்மிடறனர்மான்மழுவேந்திய
கையினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
தையலோர்பாகமாத்தண்மதிசூடிய
வையனரடிதொழவல்லலொன்றில்லையே. (எ)

சிலந்தனன்மூப்புரஞ்செற்றவன்சீரினர்
மலைந்தனல்வலரக்கன்வலிவாடினன்
கலைந்தனர்புறவணிமஞ்ஞைகாட்டுப்பள்ளி
நிலைந்தனல்வணங்கிடத்தவமதுவாகுமே. (அ)

செங்கண்மாறிகழ்ந்தருமலருறைசெழுமுகன்
றங்கையாற்றிருமுடிதடிந்தழலுருவாயினன்
கங்கையார்சடையினன்கருதுகாட்டுப்பள்ளி
யங்கையாற்றிருமுமவர்க்கல்லலொன்றில்லையே. (கூ)

போதியார்பிண்டியாரென்றவப்பொய்யர்கள்
வாதினாலுணாயவைமெய்யலவைகளுங்
காரினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
யீரினர்தொழுதெழவின்பம்வந்தெய்துமே. (ம)

பொருபுனல்புடையணிபுறவநன்னகர்மனன்
னருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொற்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பாவியதமிழ்சொலப்பறையுமெய்ப்பாவமே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தியாடியபபா-தேவியார-வராகொண்டமுலையம்மை.

(திருஅரதைப்பெரும்பாழி-பண-கொலலி.)

திருசிற்றம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தடுபேய்கணமுழக்கமுதுகாட்டிடை
நித்தமாகநடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (க)

கயலசேலகருங்கண்ணியர்தாடொறும்
பயிலுகொள்ளப்பலிதேர்த்துழல்பான்மையா
ரியலுவானோர்நிறைந்தேரார்களுக்கெண்ணரும்
பெயர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (உ)

கோடல்சாலவ்வுடையார்கொலியாணையின்
மூடல்சாலவ்வுடையார்மூளிகானிடை
யாடல்சாலவ்வுடையாரழகாகிய
பீடர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (ங)

மண்ணர்நீராரழலார்மலிகாலினர்
விண்ணாவேதம்விரித்தோதுவார்மெய்ப்பொருள்
பண்ணர்பாடலுடையாரொருபாகமும்
பெண்ணர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (ச)

மறையர்வாயின்மொழிமாஞெடுவெண்மழுக்
கறைகொள்சூலம்முடைக்கையர்காரார்தருந்
நறைகொள்கொன்றைநயந்தார்தருஞ்செல்வனிமேற்
பிறையர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (ஞ)

புற்றரவம்புலித்தோலரைக்கோவணத்
தற்றிரவின்னடமாடுவர்தாழ்தரு
சுற்றமர்பாரிடந்தொல்கொடியின்மிசைப்
பெற்றர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (ட)

குணையிறுத்தஞ்சுரிசங்கமர்வெண்பொடி
யிணையிலேற்றையுகந்தேறுவரும்மெரி
கணையினின்மூப்புரஞ்செற்றவர்கையினிற்
பிணையர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (ண)

சரிவிலாவல்லரக்கன்றடந்தோடலை
நெரிவிலாரவ்வடர்த்தார்நெறிமெல்குழ
லரிவைபாகமமர்ந்தாரடியாரொடும்
பிரிவில்கோயில்லாதைப்பெரும்பாழியே. (அ)

வரியராவென்பணிமார்பினர்நீர்மல்கு
மெரியராவுஞ்சடைமேற்பிறையேற்றவர்
கரியமாலோடயன்காண்பரிதாகிய
பெரியர்கோயில்லாதைப்பெரும்பாழியே. (கூ)

நாணிலாதசமண்சாக்கியர்நாடொறும்
மேணிலாதம்மொழியவ்வெழிலாயவர்
சேணுலாமும்மதிதீயெழச்செற்றவர்
பேணுகோயில்லாதைப்பெரும்பாழியே. (ம)

நீரினுர்புன்சடைநிமலனுக்கிடமெனப்
பாரினுர்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினுர்காழியுண்ஞானசம்பந்தன்செய்
யேரினுர்தமிழ்வல்லார்க்கில்லையாம்பாவமே. (யக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-பரதேசுவரர்-தேவியார்-அலங்காரநாயகியம்மை.

(திருமயேந்திரப்பள்ளி-பண்-கொல்லி.)
திருச்சிற்றம்பலம்.

நிலைதருபவளமுஞ்சிலம்பிழையிரமுஞ்
சுலைதருமகிலொடுகனவளைபுதருங்
வலைவிலாலெயிலெய்தமயேந்திரப்பள்ளியுள்
ளரவரையபுகனையடியிணைபணிமினே. (க)

கொண்டல்சேர்கோபுரங்கோலமார்மாளிகை
கண்டலுங்கைதையுங்கமலமார்வாவியும்
வண்டிலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியிற்
செண்டுசேர்விடையினன்திருந்தடிபணிமினே. (உ)

கோங்கிளவேங்கையுங்கொழுமலர்ப்புலீனையுந்
தாங்குதேன்கொன்றையுந்தருமலர்க்குரவமும்
மாங்கரும்பும்வயன்மயேந்திரப்பள்ளியுள்
ளாங்கிருந்தவன்கழலடியிணைபணிமினே. (ங)

வங்கமார்சேணுயர்வருதியான்மிகு
சங்கமாமொலியதிற்றருபுகைகமழ்தரும்
மங்கையோர்பங்கினன்மயேந்திரப்பள்ளியுள்
ளெங்களையகன்றனதிணையடிபணிமினே. (ச)

நித்திலத்தொகையலநிரைதருமலரெனச்
சித்திரப்புணரிசேர்த்திடத்திகழ்ந்திருந்தவன்
மைத்திகழ்கண்டனன்மயேந்திரப்பள்ளியுட்
கைத்தலமழுவனைக்கண்டடிபணிமினே. (ஞ)

சந்திரன்கதிரவன்ழருபுகழயனெடு
பிந்திரன்வழிபடவிருந்தவெம்பிறையவன்
மந்திரம்மறைவளர்மயேந்திரப்பள்ளியுள்
எந்தமில்லழகனேயடிபணிந்துய்ம்மினே. (சு)

சடைமுடிமுனிவர்கள்சமைவொடும்வழிபட
நடதவில்புரிவினனறவணிமலரொடு
படர்சடைமதியினன்மயேந்திரப்பள்ளியுள்
எடல்விடையுடையவனடிபணிந்துய்ம்மினே. (எ)

சிரமொருபதுமூடைச்செருவலியரக்கனைக்
காமிருபதுமிறக்கனவரையடர்த்தவன்
மரவமர்பூம்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
எரவமர்சடையனேயடிபணிந்துய்ம்மினே. (அ)

நாகணைத்துயில்பவன்னலமிகுமலரவ
னாகணைந்தவர்கழலணையவும்பெறுகிலர்
மாகணைந்தலர்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
யோகணைந்தவன்கழலுணர்ந்திருந்துய்ம்மினே. (கூ)

உடைதுறந்தவர்களுமுடைதுவருடையரும்
படுபழியுடையவர்பகர்வனவிடுமினீர்
மடைவளர்வயலணிமயேந்திரப்பள்ளியு
ளிடமுடையீசனேயிணையடிபணிமினே. (ய)

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியு
ணம்பனுர்கழலடிஞானசம்பந்தன்சொ
னம்பரமிதுவென நாவினவில்லவ
ரும்பாரொடுர்கொளவுயர்பதியணைவரே. (யக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-திருமேனியழகர்-தேவியார்-வடிவாம்பிகை.
ஆறாந்திருமுறை முற்றிற்று.

(திருவடகம்-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

வன்னியுமத்தமூமதியொதிசடையினன்
பொன்னியதிருவடிபுதுமலரவைகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவ
ரின்னிசைப்பாடலாமோடகத்தொருவனே. (க)

கொடிதெறிமானிகைக்கோபுரங்குளிர்மதி
வடிவுறவமைதரமருவியவேடகத்
தடிகளேயடிபணிந்தரற்றுமினன்பிலு
மிடிபடும்வினைகள்போயில்லையதாகுமே. (உ)

குண்டலந்திகழ்தருகாதுடைக்குழகனே
வண்டலம்பும்மலர்க்கொன்றைவாண்மதியணி
செண்டலம்பும்விடைச்சேடனூரோடகங்
கண்டிகைதொழுதலுங்கவலிலாநாயகனுமே. (ங)

எலமார்தருகுழலேழையோடெழில்பெறுங்
கோலமார்தருவிடைக்குழகனுருவிடஞ்
சாலமாதவிகளுஞ்சந்தனஞ்சண்பகஞ்
சீலமாடகஞ்சேர்தலாஞ்செல்வமே. (ச)

வரியணிநயனநன்மேனிமகண்மறுகிடக்
கரியினையுரிசெய்தகறையணிமிடறினன்
பெரியவன்பெண்ணினேடாணலியாகிய
வெரிவனுறைவிடமேடகக்கோயிலே. (ஞ)

பொய்கையின்பொழிலுமதுமலர்த்தென்றலார்
வைகையின்வடகரைமருவியவேடகத்
தையனேயடிபணிந்தரற்றுமின்னடர்தரு
வெய்யவன்பிணிகெடவீடெளிதாகுமே. (சு-எ)

தடவரையெடுத்தவன்தருக்கிறத்தோளடர்ப்
படவிரலூன்றியேபரிந்தவற்கருள்செய்தான்
மடவரலெருக்கொடுவன்னியுமத்தமு
மிடமுடைச்சடையினனேடகத்திறைவனே. (அ)

பொன்னுமாமணிகளும்பொருதிரைச்சந்தகி
றன்னுளார்வைகையின்கரைதனிற்சடைவுற
வன்னமாம்பனுமாலடிமுடிதேடியு
மின்னவாறெனவொணனேடகத்தொருவனே. (கூ)

குண்டிகைக்கையினர்குணமிலாத்தேரர்கள்
பண்டியைப்பெருக்கிடும்பளகர்கள்பணிகிலீர்
வண்டிரைக்கும்மலர்க்கொன்றையும்வன்னியும்
மிண்டைசேர்க்குஞ்சடையேடகத்தெந்தையே. (எ)

சோடுசந்தனமில்கொண்டிழிவைகைநீ
ரோடுசென்றணைதருமேடகத்தொருவனே
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன
பாடல்பத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (ய்க)

திருச்சிற்றம்பலம்.

(திருச்சாத்தானம்-பண்-கொல்லி.)

திருசிற்றமபலம்.

நீரிடைத்துயின்றவன் நம்பிநீள்சாம்புவான்
பேருடைச்சுகிரீவன்னுமன்றொழக்
காருடைநஞ்சுண்டிகாத்தருள்செய்தவெஞ்
சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. (க)

கொல்லியேறுடையவன்கோவணவாடையன்
பல்லியார்பிதலைப்பலிகொளும்பரமனார்
மூல்லையார்புறவணிமுதுபதிறைகமழ்
நில்லையாறுறைவிடந்திருவுசாத்தானமே. (உ)

தாமலர்போலவேதக்கனர்வேள்வியை
யூமனர்தங்களுவாக்கினரெருதொடிக்
காமனருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுதல்
சேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. (ங)

மறிதருகரதிலினன்மால்விடையேறியான்
குறிதருகோலநற்குணத்தினரடிதொழ
நெறிதருவேதியர்நித்தலுநியமஞ்செய்
செறிதருபொழிலணிதிருவுசாத்தானமே. (ச-ரு-கூ)

பண்டிரைத்தயனுமாலும்பலபதத்தர்கள்
தொண்டிரைத்துமலர்தூவித்தோத்திரஞ்சொலக்
கொண்டிரைக்கொடியொடிங்குருவினல்லினற்
றெண்டிரைக்கழனிசூழ்திருவுசாத்தானமே. (எ)

மடவரல்பங்கினன்மலிதலைமதியாது
சடசடவெடித்தவன்றலைபத்துநெரிதர
வடர்தரலூன்றியங்கேயவற்கருள்செய்தான்
றிடமெனவுறைவிடந்திருவுசாத்தானமே. (அ)

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

ஆணலார்பெண்ணலரரயெமையாளுக்குங்
காணுறைவண்ணத்தான்கருதுவார்மனத்துளான்
பேணுவார்பிணியொடும்பிறப்பறுப்பானிடஞ்
சேணுலாமாளிகைத்திருவுசாத்தானமே. (க)

தானமார்வாழ்க்கையான்காரமண்டேரர்சொல்
ஞானமாக்கொண்மிநீருரைபினுய்யவெனில்
வானமார்மதிலணிமாளிகைவளர்பொழிற்
றேனமாமதியந்தோய்திருவுசாத்தானமே. (ஏ)

வரைதிரிந்திழியுநீர்வளவயற்புகலிமன்
திரைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானமா
யுரைதெரிந்தணருஞ்சம்பந்தனுண்டமிழ்வல்லார்
நரைதினையின்றியேதன்னெறிசேர்வரே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மந்திரபுரீசுவரர்-தேவியார்-பெரியநாயகியம்மை.

(திருமுதுகுன்றம்-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
வண்ணலாராயிழையாளொடுமமர்விடம்
விண்ணின்மாமழைபொழிந்திழியவெள்ளருவிசேர்
திண்ணிலார்புறவணிதிருமுதுகுன்றமே. (க)

வெறியுலாங்கொன்றையந்தாரிஞன்மேதகு
பொறியுலாமரவசைத்தாடியோர்புண்ணியன்
மறியுலாங்கையிஞன்மங்கையோடமர்விடஞ்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே. (உ)

ஏறனர்விடைமிசையிமையவர்தொழவுமை
கூறனர்கொல்புலித்தோலினர்மேனிமே
னீறனர்நிறைபுனற்சடையனர்நிகழ்விடந்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (ங)

உரையினருமபொருளாயினுமையொடும்
விரையினர்கொன்றைசேர்சடையினுன்மேவிடம்

முளையினொலியெனவோங்குமுத்தமுமெய்த்
திளையினெறிபுனற்றிருமுதுகுன்றமே. (ச)

கடியவாயினகூற்களிறினைப்பிளிறவோ
ரிடியவெங்குலிலினேடாளிசென்றிடுநெறி
வடியவாய்மழுவினன்மங்கையோடமர்விடஞ்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே. (ஞ)

கானமார்கரியினீருரிவையார்பெரியதோர்
வானமார்மதியிலேடரவர்தாமருவிட
மூனமாயினபிணியவைகெடித்துமையொடுந்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (ஙு)

மஞ்சர்தாமலர்கொடுவானவர்வணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பவே
யஞ்சொலாளுமையொடுமமர்விடமணிகலிச்
செஞ்சொலார்பயிறருந்திருமுதுகுன்றமே. (ஏ)

காரினார்தருங்கயிலைதன்மலையினை
யேரினார்மூடியிராவணனெடுத்தானிற
வாரினார்முலையொடும்மன்னினார்மருவிடஞ்
சீரினார்திகழ்ந்தருந்திருமுதுகுன்றமே. (அ)

ஆடினார்கானகத்தருமறையினிற்பொருள்
பாடினார்பலபுகழ்ப்பரமனாரிணையடி
யேடினார்மலர்மிசையயனுமாலிருவருந்
தேடினாரறிவொணார்திருமுதுகுன்றமே. (க)

மாசுமெய்தூசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசுமெய்யுளவல்லபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினமிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந்திருமுதுகுன்றமே. (ம)

திண்ணனீர்புறவணிதிருமுதுகுன்றமா
றண்ணலன்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
லெண்ணினனீரைந்துமாலையுமியலுமாப்
பண்ணினற்பாடுவார்க்கில்லையாம்பாவமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

(திருத்தென்குடித்திட்டை-பண்-கொல்லி)

திருச்சிற்றம்பலம்.

மூன்னே தான்மறையவைமூறைமுறைகுறையொடுத்
தன்னதாடிழுதெழநின்றவன்றன்னிட
மன்னுமாகாவிரிவந்தடிவருடநற்
செந்தெலார்வளவயற்றென்குடித்திட்டையே. (இ)

மகரமாடுங்கொடிமன்மதவேடனே
நிகரலாகாதெருப்பெழவிழித்தானிடம்
பகரபாணித்தலம்பன்மகரத்தொடுஞ்
சிகரமாளிகைதொருந்தென்குடித்திட்டையே. (உ)

கருவினுலன்றியேகருவெலாமாயவ
னுருவினுலன்றியேயுருவுசெய்தானிடம்
பருவநாள்விழவொடும்பாடலோடாடலுற்
றிருவினன்மிகுபுகழ்த்தென்குடித்திட்டையே. (ங)

உண்ணிலாவாவியாயோங்குதன்னல்லமையை
விண்ணிலாரறிகிலாவேதவேதாந்தனூ
ரெண்ணிலாரெழில்மணிக்கனகமாளிகையிளற்
றெண்ணிலாவிரிதருந்தென்குடித்திட்டையே. (ச)

வருந்திவானேர்கள்வந்தடையமாநஞ்சுதா
னருந்தியாரமுதவர்க்கருள்செய்தான்மருவுமூர்
செருந்திபூமாதவிப்பந்தல்வண்செண்பகற்
றிருந்துநீள்வளர்பொழிற்றென்குடித்திட்டையே. (ஞ)

ஊறினூரோசையுள்ளொன்றினுன்றிமால்
கூறினூமர்தருங்குமரவேடாரைபூ
சாறினூர்பொய்யகத்தையுணர்வெய்தினுமெய்
தேறினூர்வழிபடுந்தென்குடித்திட்டையே. (ட)

கானலக்கும்மவன்கண்ணிடந்தப்பநீள்
வானலக்குந்தவத்தேவுவைத்தானிடந்
தானலத்தெள்ளமூர்தாமமாத்தண்டுறை
தேனலக்கும்வயற்றென்குடித்திட்டையே. (ண)

மாலொடும்பொருதிறல்வாளரக்கன்னெரிந்
தோலிடும்படிவிரலொன்றுவைத்தானிடங்

காலொடுங்கனகமூக்குடன்வரக்கயல்வரால்
சேலொடும்பாய்வயற்றென்குடித்திட்டையே. (அ)

நாரணன்றன்னோடுதான்மூகன்றானுமாய்க்
காரணன்னடிமுடிகாணவொண்ணானிடம்
ஆரணங்கொண்டுபூசுரர்கள்வந்தடிதொழச்
சீரணங்கும்புகழ்த்தென்குடித்திட்டையே. (கூ)

குண்டிகைக்கையுடைக்குண்டரும்புத்தரும்
பண்டிசைத்தேயிடும்பற்றுவிட்டுஉர்தொழும்
வண்டிரைக்கும்பொழிற்றண்டலைக்கொண்டலார்
தெண்டிரைத்தண்புனற்றென்குடித்திட்டையே. (ய)

தேனலர்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கானலார்கடிபொழில்சூழ்தருங்காழியுண்
ஞானவாரிஞானசம்பந்தனசெந்தமிழ்
பானல்லார்மொழிவலார்க்கில்லையாம்பாவமே. (யக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீசுவரர்-தேவியார்-உலகநாயகியம்மை.

(திருக்காளத்தி-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்கும்மரம்
முந்துமாமுகலியின்கரையினிலுமையொடும்
மந்தமார்பொழில்வளர்மல்குவண்காளத்தி
யெந்தையாரிணையடியென்மனத்துள்ளவே. (க)

ஆலமாமரவமோடமைந்தசீர்ச்சந்தனஞ்
சாலமாமியுஞ்சண்பகமுந்திமியே
காலமார்முகலிவந்தணைதருகாளத்தி
நீலமார்கண்டனேநினையுமாநினைவதே. (உ)

கோங்கமேஞ்சுரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினில்
லாங்கமார்காளத்தியடிகளேயடிதொழ
வீங்குவெந்துயர்கெடும்வீடெளிதாகுமே. (ங)

கரும்புதேன்கட்டியுங்கதலியின்கனிகளு
மருந்தமுதீர்முகலியின்கரையினிலணிமதி
யொருங்குவார்சடையினன்காளத்தியொருவனே
விரும்புவாரவர்கடாம்விண்ணுலகாள்வரே. (சு)

வரைதருமகிலொடுமாமுத்தமுந்தியே
திரைதருமுகலியின்கரையினிற்றேமலர்
விரைதருசடைமுடிக்காளத்திவிண்ணவ
னிரைதருகழலினை நித்தலுநினையினே. (டு-சூ-எ)

முத்துமாமணிகளுமுழுமலர்த்திரள்களு
மெத்துமாமுகலியின்கரையினிலெழில்பெறக்
கத்திடவரக்கனைக்கால்விரலூன்றிய
வத்தனன்காளத்தியணைவதுகருமமே. (அ)

மண்ணுமாவேங்கையும்மருதுகள்பீழ்ந்துந்தி
தண்ணுமாமுகலிபின்கரையினன்மைசேர்
வண்ணமாமலரயன்மாலவன்காண்கிலா
வண்ணலார்காளத்தியாங்கணேந்துய்மினே. (கூ)

வீங்கியவுடலினர்விரிதருதுவருடைப்
பாங்கிலார்சொலைவிம்பரனடிபணியுமி
னேங்குவல்காளத்தியுள்ளமோடுணர்தரா
வாங்கெம்விணைகளோவானவர்க்கொருவனே. (ஙு)

அட்டமாசித்திகளனைதருகாளத்தி
வட்டவார்சடையனைவயலணிகாழியான்
கிட்டதான்மறைவலஞானசம்பந்தன்சொ
லிட்டமாப்பாடுவார்க்கில்லையாம்பாவமே. (ஙூ)

திருச்சிற்றம்பலம்.

(திருப்பிரமபுரம்-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

கரமுனம்மலராற்புனன்மலர்தூவியேகலந்தேத்துமின்
பரமனூர்பலபேரிரைத்தொலிபத்தர்சித்தர்கடாம்பயில்
வரமுன்னவருள்செய்யவல்லவெம்மையனுடனாமேயசீர்ப்
பிரமனூர்பிரமாபுரத்துறைபிஞ்ஞகனருள்பேணியே. (எ)

விண்ணிலார்மதிசூடிஞன்விரும்பும்மறையவன்றன்றலை
யுண்ணநன்பலிபேணினனுலகத்துளுனுயிரான்மகிழ்
பெண்ணினல்லாரிருமேனியான்பிரமாபுரத்துறைகோயினு
ளண்ணலாரருளாளனுயமர்ன்றவெம்மூடையாதியே. (உ)

எல்லியில்புகழாளனும்மிமையோர்கணத்துடன்கூடியும்
பல்லியார்தலையிற்பலியதுகொண்டுகந்தபடிறனுந்
தொல்லைவையகத்தேறுதொண்டர்கமேலர்சொரிந்தேத்தவே
மல்லியம்பொழிறேன்மல்கும்பிரமாபுரத்துறைமைந்தனே. (ஙு)

அடையலார்புரஞ்செற்றியந்தணர்தாமாடமாதொடும்
பெடையெலாங்கடற்கானல்புல்கும்பிரமாபுரத்துறைகோயிலான்
றொடையலார்நறுங்கொன்றையானறுழிலேபரவிநின்றேத்திஞ
லிடையிலார்சிவலோகமெய்துதற்கேதுகாணுங்கண்மினே. (சு)

வாயிடைம்மறையோதிமங்கையர்வந்திடப்பலிகொண்டுபோய்ப்
போயிடம்மெரிகானிடைப்புரிநாடகம்மினிதாடினன்
பேயொடுங்குடிவாழ்வினன்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்
றூயிடைப்பொருள்தந்தையாருமென்றேறுதுவார்களருடன்மையே. ஞ

ஊடிஞலினியாவதென்னுயர்நெஞ்சமேயுறுவல்வினைக்
கோடிநீயுழல்கின்றதென்னழலம்புதன்கையிலேந்தினன்
பீடிநேர்ந்ததுகொள்கையான்பிரமாபுரத்துறைவேதியன்
னேடுநேர்மதியோடராவணியெந்தையென்றுநின்றேத்திடே. (ரு)

செய்யன்வெள்ளியன்ஒள்ளியார்சிலரென்றுமேத்தநினைந்திட
வையனுண்டகையத்தனருமாமறைப்பொருளாயினன்
பெய்யுமாமழையானவன்பிரமாபுரம்மிடம்பேணிய
வெய்யவெண்மழுவேந்தியைநினைந்தேத்துமின்வினைவீடவே. (எ)

கன்றெருக்கையிலேந்திநல்விளவின்கனிபடநூறியுஞ்
சென்றெருக்கியமாமறைப்பொருடேர்ந்தசெம்மலோடுமா
யன்றரக்கனைச்செற்றவன்னடியும்முடியவைகாண்கிலார்
பின்றருக்கியதண்பொழிற்பிரமாபுரத்தரன்பெற்றியே. (அ)

உண்டுடுக்கைவிட்டார்களும்மூயர்களுஞ்சிமண்டைகொடேரரும்
பண்டடக்குசொற்பேசுமப்பரிவொன்றிலார்கள்சொற்கொள்ளன்மின்
றண்டொடக்குவன்சூலமூந்தழன்மாமழுப்படைதன்கையிற்
கொண்டொடுக்கியமைந்தனெம்பிரமாபுரத்துறைகூத்தனே. (கூ)

பித்தனைப்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்கழல்பேணியே
மெய்த்தவத்தினின்மேலுர்களுக்குணைசெய்துநன்பொருண்மேவிட
வைத்தசிந்தையுண்ஞானசம்பந்தன்வாய்தவின்றெழுமாலைகள்
பொய்த்தவம்பொறிநீங்கவின்னிசை போற்றிசெய்யமெய்ம்மாந்தரே.

திருச்சிற்றம்பலம்.

பதிகம் – கூ.

(திருக்கண்டியூர்-திருவீரட்டம்-பண்-கொல்லி.)

திருச்சிறற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுணைசெய்மினீரருள்வேண்டுவீர்
கனவிலார்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டனுள்
றனமுனேதனக்கின்மையோதமராயினுரண்டமாளத்தால்
வனனில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வுலயமாப்பலிதேர்ந்ததே.க

உள்ளவாறெனக்குணைசெய்மின்னுயர்வாயமாதவம்பேணுவீர்
கள்ளவிழ்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகாதலான்
பிள்ளைவாள்பிறைசெஞ்சடைம்பிசைவைத்தகும்பெருநீரொலி
வெள்ளநீர்தாங்கியதென்கொலோமிகுமங்கையாளுடனுகவே. (உ)

அடியராயினீர்சொல்லுமின்னறிவின்றிலேனரன்செய்கையைப்
படியெலாந்தொழுமேதகுகண்டியூர்வீரட்டத்துறைபான்மையான்
முடிவுமாய்முதலாயிவ்வுலகமுழுதுமாயபுராணனோர்
பொடியதார்திருமார்பினிற்புரிநூலும்பூண்டெழுபொற்பதே. (ங)

பழையதொண்டர்கள்பகருமின்பலவாயவேதியன்பால்மையைக்
கழையுயர்ம்புனல்மல்குகாவிரிமன்னுகண்டியூர்வீரட்டன்
சூழையொர்காதினிற்பெய்துகந்தொருசூன்றின்மங்கைவெருவுறப்
புழைநெறிக்கைநன்மாவுரித்ததுபோர்த்துகந்தபொலிவதே. (ச)

விரவிலாதமைக்கேட்கிலிறைவடி விரும்பியாட்செய்வீர்விளம்புமின்
கரவெலாந்தினைமண்மிகாவிரிக்கண்டியூருறைவீரட்டன்
முரவமொந்தைமுழாவொலிக்கமுழங்கும்பேயொடுங்கூடிப்போய்
பரவுவானவர்க்காதவார்கடனஞ்சமுண்டபரிசதே. (டு)

இயலுமாறெனக்கியம்புமின்னிறைவன்னுமாய்நிறைசெய்கையைக்
கயனெடுங்கண்ணினூர்கடாம்பொலிகண்டியூருறைவீரட்டன்
புயல்பொழிந்திழிவானுலோர்களுக்காதவன்றயன்பொய்ச்சிரம்
மயனதவதரித்தமற்றதிலுணுகந்தவருத்தியே. (சு)

திருந்துதொண்டர்கள்செப்புமின்மிகச்செல்வன்றன்னதுதிறமேலாங்
கருந்தடங்கண்ணினர்கடாந்தொழுகண்டியூருறைவீரட்ட
னிருந்தநாலவோடாலநீழல்லறமூனாத்தனும்மிகுவெம்மையார்
வருந்தவன்சிலையாலமாமதில்மூன்றுமாட்டியவண்ணமே. (ஏ)

நாவிரித்தரன்றெல்புகழ்பலபேணுவீரிறைநல்குமின்
காவிரித்தடம்புனல்செய்கண்டியூர்வீரட்டத்துறைகண்ணுதல்
கோவிரிப்பயனுனைஞ்சாடியகொள்கையுங்கொடிவாளைபெற
மாவனாத்தலத்தாலரக்கனைவலியைவாட்டியமாண்பதே. (அ)

பெருமையேசரணகவாழ்வுறுமாந்தர்காளிறைபேசுமின்
கருமையார்பொழில்சூழ்தண்வயற்கண்டியூருறைவீரட்ட
னெருமையாலுயர்மாலுமற்றமலரவனுணர்ந்தேத்தவே
யருமையாலவருக்குயர்ந்தெரியாகிநின்றவத்தன்மையே. (கூ)

நமமொழிறப்பறுக்குமாந்தர்கணவிலுமில்லுமைக்கேட்கின்றேன்
கமழிவயல்சூழ்தண்புனற்கண்டியூருறைவீரட்டன்
றமழ்ந்தெழுசாக்கியச்சமணரோடுமதுகொளா
தமரானவரேத்தவந்தகன்றல்னைச்சூலத்திலாய்ந்ததே. (ய)

கருத்தனைப்பொழில்சூழ்ங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வனை
யருத்தனைத்திறமடியர்பால்மிகக்கேட்டுகந்தவினுவுரை
திருத்தமாந்திகழ்காழிஞானசம்பந்தன்செப்பியசெந்தமி
ழொருத்தராகிலும்பலர்களாகிலுமுரைசெய்வாருயர்ந்தார்களே. (ரூ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-வீரட்டேசுவரர்-தேவியார்-மங்கைநாயகியம்மை.
இறை - உத்தரவு.

(திருவாலவாய்-பண்-கொல்லி.)
திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுரிபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (க)

ஆகமத்தொடுமந்திரங்களைமத்தசங்கதபங்கமாப்
பாகதத்தோடிசைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (உ)

அத்தருபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சித்திரத்தின்மடிந்தொடிந்தசுனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (கூ)

சந்துசேணுமிழ்ந்துசேணுந்தருமசேணுங்கருமைசேர்
கந்துசேனுங்கனகசேனமுதலாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (சு)

கூட்டினர்கிளியின்விருத்தமூரைத்தோரொலியின்மெழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களோப்பல்லறி
காட்டியேவருமாடலாங்கவர்கையரைக்கரிவொல்நிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (டு)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமண
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுபொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (சு)

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலமெனவாசக
மத்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியநாயமே
யந்தணம்மருகத்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சித்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (எ)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனர்மிசைசெற்றதீப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (அ)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவத்தையினர்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டவாயசனிக்குமே
நாமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (கூ)

தங்களுக்குமச்சாக்கியர்க்குத்தரிப்பொணுகநற்சேவடி
யெங்களுபகணத்தொழித்திடுக்கேமடித்தொருபொய்த்தவம்
பொங்குதூல்வழியன்றியேபுலவோர்களோப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (ஙு)

எக்காமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனெனுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்மூன்னினை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (ய)

திருச்சிற்றம்பலம்.

இது-பாண்டியராஜனுடைய சுரப்பிணிதீர்ப்பதற்காகத் திருஞானசம்பந்தசுவாமிகளெழுந்தருளியிருக்கும்போது பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார்கண்டு சுவாமிகளுடைய திருமேனி மிகுந்த பாலியமாயிருக்கின்றது மன்றித், தனிமையாயுமிருக்கின்றது. சமணர்களோ சரீரதிடமுள்ளவர்களும் பலருமாயிருக்கின்றாரகளென்று உட்பரிவுற்றக் குறிப்பினைத் திருஞானசம்பந்தசுவாமிகள திருவுள்ளத்தினுணர்ந்துகொண்டி அன்னையே யஞ்சவேண்டுவதில்லையென்று கட்டளையிட்ட பதிகம்.

(தனித் திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

கல்லாணீழ லல்லாற்றேவை, நல்லார்பேணு நல்லோராமே. (க)
கொன்றைசூடி தின்றதேவை, யன்றியொன்று தன்றிலோமே. (உ)
கல்லாநெஞ்சி னில்லாவீசன், சொல்லாதாரோ டல்லோநாமே. (ங)
கூற்றுதைத்த நீற்றினானப், போற்றுவார்க டோற்றிலரே. (ச)
காட்டுளாடும் பாட்டுளானை, நாட்டுளோருந் தேட்டுளாரே. (ஞ)
தக்கன்வேள்விப் பொக்கந்தீர்த்த, பக்கதேவர் பக்கத்தோமே. (ரு)
பெண்ணுரைய வின்னேரர்கோவை, நண்ணுதானை யெண்ணுநாமே. (அ)
தூர்த்தன்வீரந் தீர்த்தகோவை, யார்த்தமாக வேத்தினேமே. (ஆ)
பூவினுவுந் தாவினுனு, நாவினுவு மோவினுரே. (கூ)
மொட்டமணர் கட்டரதேரர், பிட்டர்சொல்லை விட்டுளோமே. (ய)
அந்தண்காழிப் பந்தன்சொல்லைச், சிந்தைசெய்வோ ருய்ந்துளாரே.

திருச்சிற்றம்பலம்.

(திருவேகம்பம்-திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித் திருவேகம்பத், தொருவாவென்ன மருவாவினையே. க
மதியார்கச்சி நதியேகம்பம், விதியாலேத்தப் பதியாவாமே. (உ)
கலியார்கச்சி மலியேகம்பம், பலியார்போற்ற நிலியாவினையே. (ங)
வரமாகச்சிப் புரமேகம்பம், பரவாவேத்த விரவாவினையே. (ச)

படமார்கச்சி யிடமேகம்பத், துடையாயென்ன வடையாவினையே.
நலமார்கச்சி நிலவேகம்பங், குலவாவேத்தக் கலவாவினையே. (சு)
கரியின்னுரியன் திருவேகம்பன், பெரியபுரமூன் றெரிசெய்தானே.
இலங்கையரசைத் துலங்கலுன்று,நலங்கொள்கம்ப னிலங்குசரணே.அ
மறையோனரியு மறியாவனலன்,னெறியேகம்பங் குறியாற்றொழுமே.
பதியாத்தேரர் நெறியில்கச்சிச், செறிகொள்கம்பங் சூழ்ருவோமே.
கொச்சைவேந்தன் கச்சிக்கம்ப, மெச்சுஞ்சொல்லி நச்சும்புகழே.ய

திருச்சிற்றம்பலம்.

(திருச்சிற்றேமம்-பண்-கொல்லிக்கௌவாணம்.)

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள் வாண்முகமாதர் பாடநீள்சடைக்
குறைவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
சிறைவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தா
னிறைவனென்றேபுலகெல்லாமேத்தநின்றபெருமானே. (க)

மாகத்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைப்
பாகத்திங்கள்சூடியோராடன்மேயபண்டங்கன்
மேகத்தாடுசோலைசூழ்மிடைசிற்றேமமேவினு
ணாகத்தோர்கொளாமையைப்பூண்டவண்ணலல்லனே. (உ)

நெடுவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
கொடுவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
படுவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக்காலினூற்காய்ந்தகடவுளல்லனே. (ங)

கதிராரிதிங்கள்வாண்முகமாதர்பாடக்கண்ணுதன்
முதிராரிதிங்கள்சூடியோராடன்மேயமுக்கண
னெதிராரிப்புனலம்புன்சடையெழிலாருஞ்சிற்றேமத்தா
னதிராரிபைங்கணேறுடையாதிமூர்த்தியல்லனே. (ச)

வானார்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைக்
கூனார்திங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றேனார்வண்டுபண்செயுந்திருவாருஞ்சிற்றேமத்தான்
மானார்விழிநின்மாதோடமெழிந்தமைத்தனல்லனே. (ஞ)

பனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடப்பல்சடைக்
கணிவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையால்
றனிவெள்விடையன்புள்ளினத்தாமஞ்சூழ்சிற்றேமத்தான்
முனிவுமூப்புநீக்கியமுக்கண்மூர்த்தியல்லனே. (ஈ)

இளருந்திங்கள்வாண்முகமாதர்பாடக்கேடிலர
வளருந்திங்கள்சூடியோராடன்மேயமாதவன்
றளிருங்கொம்புமதுவுமார்தாமஞ்சூழ்சிற்றேமத்தா
னெளிரும்வெண்ணூன்மார்பனென்னுள்ளத்துள்ளானல்லனே. (எ)

சூழ்ந்தநிங்கள்வாண்முகமாதர்பாடச்சூழ்சடைப்
போழ்ந்தநிங்கள்சூடியோராடன்மேயபுண்ணியன்
றாழ்ந்தவயற்சிற்றேமத்தான்றடவரையைத்தன்னுளி
லாழ்ந்தவரக்கனெல்தவன்றடர்த்தவண்ணலல்லனே. (அ)

தனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடத்தாழ்சடைத்
துனிவெண்டிங்கள்சூடியோராடன்மேயதொன்மையா
னனிவண்ணச்சிற்றேமத்தானலர்மேலநீதளுளனு
மணிவண்ணனுமூல்காண்கிலாமழுவாட்செல்வனல்லனே. (உ)

வெள்ளநீர்நிங்கள்வாண்முகமாதர்பாடவிரிசடைப்
பிள்ளைநிங்கள்சூடியோராடன்மேயபிஞ்ஞக
னுள்ளத்தாரிற்றேமத்தானுருவார்புத்தொப்பில்லாக்
கள்ளத்தானைத்தனதியுட்கரந்துவைத்தானல்லனே. (ஏ)

கல்லிலோதமல்குதண்கானல்சூழ்ந்தகாழியா
னல்லவாயவின்றமிழ்நவிலுஞானசம்பந்தன்
செல்வனூர்சிற்றேமத்தைப்பாடல்சீரார்நாவினல்
வல்லராகிவாழ்த்துவாரல்லலின்றிவாழ்வரே. (ஐ)

திருச்சிறைம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பொன்வைத்தநாதர்-தேவியார்-அகிலாண்டேசுவரியம்மை.

(கோழி-பண்-கவுசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

சந்தமார்மூலியாடன்கூறனூர்
வெந்தவெண்பொடியாடியமெய்யனூர்
கந்தமார்பொழில்சூழ்தருகாழியு
ளெந்தையாரடியென்மனத்துள்ளவே. (க)

மானிடம்மூடையார்வளர்செஞ்சடைத்
தேனிடங்கொளுங்கொன்றையந்தாரினர்
காளிடங்கொளுந்தண்வயற்காழியா
ரூனிடங்கொண்டெனுச்சியினிற்பரோ. (உ)

மைகொள்கண்டத்தர்வான்மதிச்சென்னியர்
பைகொள்வாளரவாட்டும்படிறனர்
கைகொண்மான்மறியார்கடற்காழியு
ளையனத்தணர்போற்றவிருக்குமே. (ங)

புற்றினகமும்பூளையும்வல்லியுங்
கற்றைவார்சடைவைத்தவர்காழியுட்
பொற்றொடியோடிருந்தவர்பொற்கழ
லுற்றபோதுடனேத்தியுணருமே. (ச)

நலியுநீருற்றமூநம்மூடனேய்வினை
மெலியுமாறதுவேண்டிதிரேல்வெய்ய
கலிகடந்தகையார்கடற்காழியு
ளலிகொள்செஞ்சடையாரடிபோற்றுமே. (ஞ)

பெண்ணேர்கூறினர்பேயுடனாடுவர்
பண்ணுமேத்திசைபாடியவேடத்தர்
கண்ணுளூன்றுடையார்கடற்காழியு
ளண்ணலாயவடிகள்சரிதையே. (ட)

பற்றுமானுமழுவுமழகுற
முற்றுமூர்திரிந்துபலிமுன்னுவர்
கற்றமானன்மறையவர்காழியுட்
பெற்றமேறுகந்தார்பெருமையே. (ண)

எடுத்தவல்லரக்கன்முடிதோளிற
வடர்த்துகந்தருள்செய்தவர்காழியுட்
கொடிச்சுமங்குநற்கோயிலுளின்புற
விடத்துமாதொடுதாமுமிருப்பரே. (அ)

காலன்றன்னுயிர்வீட்டுகழலடி
மாலுநான்முகன்முனும்வனப்புற
வோலமிட்டுமுன்றேடியுணர்கிலாச்
சீலங்கொண்டவனூர்திகழ்காழியே. (கூ)

உருவநீத்தவர்தாமுமுனுவர்
தருவலாடையினருத்தகவிலர்
கருமம்வேண்டுதிரோற்கடற்காழியு
ளொருவன்சேவடியேயடைந்துய்மினே. (ம)

கானல்வந்துலவுங்கடற்காழியுள்
ஞானசம்பந்தன்சொல்லியநற்றமிழ்
மானமாக்குமகிழ்த்துணைசெய்யவே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

(திருக்கழிப்பாலை-பண்-கௌசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

வெந்தருங்கியப்புகைவிம்மவே
கந்தரிற்றுலவுங்கழிப்பாலையா
ரந்தமும்மளவும்மறியாதசோர்
சந்தமாலவரீமேவியசாந்தமே. (க)

வானிலங்கவிளங்குமிளம்பிறை
தானலங்கலுகந்ததலைவனூர்
கானிலங்கவருங்கழிப்பாலையார்
மானலம்மடநோக்குடையாளொடே. (உ)

கொடிகொளேற்றினர்கூற்றையுதைத்தனர்
பொடிகொண்மார்பினிற்பூண்டதோராமையர்
கடிகொள்பூம்பொழில்சூழ்கழிப்பாலையுள்
வடிகள்செய்வனவார்க்கறிவொண்ணுமே. (ங)

பண்ணலம்படவண்டறைகொன்றையின்
றண்ணலங்கலுகந்ததலைவனூர்
கண்ணலங்கவருங்கழிப்பாலையுள்
ளண்ணலெங்கடவுள்ளவல்லனே. (ச)

எரிருலகத்தினையோரொடும்
பாரினூடனேபரவப்படுங்
காரினார்பொழில்சூழ்கழிப்பாலையெஞ்
சீரினார்கழலேசித்தைசெய்மினே. (ஞ)

துள்ளுமான்மறியங்கையிலேத்திபூர்
கொள்வரிடுவெண்டலையிற்பலி
கள்வனூறையுங்கழிப்பாலையை
யுள்ளுவார்வினையாயினவோயுமே. (க)

மண்ணினார்மலிசெல்வமும்வானமும்
மெண்ணிதீரினிதேத்துமின்பாகமும்
பெண்ணினார்பிறைநெற்றியோடிற்றமுக்
கண்ணினருறையுங்கழிப்பாலையே. (எ)

இலங்கைமன்னனையீரைந்திரட்டிதோ
ளிலங்கலூன்றியதூமழுவாளினர்
கலங்கள்வந்துலவுங்கழிப்பாலையை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (அ)

ஆட்சியாலலராலெடுமாலுமாய்த்
தாட்சியாலறியாதுதளர்ந்தனர்
காட்சியாலறியான்கழிப்பாலையை
மாட்சியாற்றொழுவார்வினைமாயுமே. (கூ)

செய்யதுண்டுவராடையினொடு
மெய்யின்மாசுபிறங்கியவீரிலாக்
கையர்கேண்மையலுங்கழிப்பாலியெம்
மையன்சேவடியேயடைந்துய்மினே. (ம)

அந்தண்காழியருமறைஞானசம்
பந்தன்பாய்புனல்சூழ்கழிப்பாலையைச்
சிந்தையாற்சொன்னசெந்தமிழ்வல்லவர்
முந்திவானுலகாடன்முறைமையே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

ஆறாந்திருமுறை - கூச.

(திருவாரூர்- பண்-கௌசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுலகாதியுமாயினன்
வெந்தவெண்பொடிப்பூசியவேதியன்
சிந்தையேபுகுந்தான்திருவாரூரெம்
மெந்தைதானெனையேன்றுகொளுங்கொலோ. (க)

கருத்தனேகருணார்புரமூன்றெய்த
வொருத்தனேயுமையாளொருகூறனே
திருத்தனேதிருவாரூரொத்தீவண்ண
வருத்தவென்னெனைபஞ்சலென்னுதே. (உ)

மறையன்மாமுனிவன்மருவார்புர
மிறையின்மாத்திரையில்லெரியூட்டினான்
மிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூரொம்
மிறைவன்ரெனைனையென்றுகொளுங்கொலோ. (ங)

பல்லிலோடுகையேந்திப்பலிதிரிந்
தெல்லிவந்திடுகாட்டெரியாடுவான்
செல்வமல்கியதென்திருவாரூரா
னல்லதீர்த்தெனைபஞ்சலெனுங்கொலோ. (ச)

குருந்தமேறிக்கொடிவிடுமாதவி
விரிந்தலர்ந்தவிரைகமழ்தேன்கொள்வறை
திருந்துமாடங்கள்சூழ்திருவாரூரான்
வருந்தும்போழ்தெனைவாடலெனுங்கொலோ. (ஞ)

வார்கொண்மென்முலையாளொருபாகமா
தூர்களாரிடுபிச்சைகொளுந்தமன்
சீர்கொண்மாடங்கள்சூழ்திருவாரூரா
னூர்கணவெனையஞ்சலெனுங்கொலோ. (சு)

வளைக்கைமங்கைநல்லாளோர்பாகமாத்
தினைக்கையானைத்துயர்படப்போர்த்தவன்
நினைக்குந்தண்புனல்சூழ்திருவாரூரா
னினைக்கும்போழ்தெனையென்றுகொளுங்கொலோ. (எ)

இலங்கைமன்னனிருபதுதோளிறக்
கலங்கக்காலிரலாற்கடைக்கண்டவன்
வலங்கொண்மாமதில்சூழ்திருவாரூரா
னலங்கறந்தெனையஞ்சலெனுங்கொலோ. (அ)

நெடியமாலும்பிரமனுதேர்கிலாப்
படியவன்பனிமாமதிச்சென்னியான்
செடிகணீக்கியதென்திருவாரூரொம்
மடிகடானெனைபஞ்சலெனுங்கொலோ. (கூ)

மாசுமெய்யின்ர்வண்டுவராடைகொள்
காசைபோர்க்குங்கலதிகள்சொற்கொளேற்
றேசமல்கியதென்றிருவாரூரெம்
மீசன்ரூனெனையேன்றுகொளுங்கொலோ. (ய)

வண்ணிகொன்றைமதியொடுகூவிளஞ்
சென்னிவைத்தபிரான்றிருவாரூரை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்வாய்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. (யக)

திருச்சிற்றம்பலம்.

(திருக்கருகாவூர்-பண்-கௌசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

மூத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே
மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்
கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம்
மத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ந)

விழுதவல்லசடையான்றனையுள்ளுவார்
கழுதநீழலகலாததேரார்செல்வமாங்
கமுதமூல்லிகமழ்கின்றகருகாவூ
ரமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (உ)

பழகவல்லசிறுத்தொண்டர்பாவின்னிசை
குழகனென்றுகுழையாவழையாவருங்
கழல்கொள்பாடலுடையார்கருகாவூரெம்
மழகர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ங)

பொடிமெய்பூசிமலர்கொய்துபுனர்ந்துடன்
செடியரல்லாவுள்ளநல்கியசெல்வத்தர்
கடிகொண்மூல்லிகமழுங்கருகாவூரெம்
மடிகள்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ச)

மையினிமலர்கொய்துவணங்கிடச்
செய்யவுள்ளம்மிகநல்கியசெல்வத்தர்
கைதன்மூல்லிகமழுங்கருகாவூரெம்
மையர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ஞ)

மாசிலொண்டர்மலர்கொண்டுவணங்கிட
வாசையாரவருணல்கியசெல்வத்தர்
காய்சினத்தவிடையார்கருகாவூரெம்
மீசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (கூ)

வெந்தநீறுமெய்பூசியவேதியன்
சிந்தைநின்றவருணல்கியசெல்வத்தான்
கந்தமல்வல்கமழுங்கருகாவூரெம்
மெந்தைவண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (எ-அ)

பண்ணினேர்மொழியாளையோர்பாகனூர்
மண்ணுகோலம்மூடையம்மலராலெடுங்
கண்ணனேடவரியார்கருகாவூரெம்
மண்ணல்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (கூ)

போர்த்தமெய்யினர்போதுழல்வார்கள்சொற்
றீர்த்தமென்றுதெளிவீர்தெளியேன்மின்
கார்த்தண்மூல்லைகமழுங்கருகாவூரெம்
மார்த்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ஙி)

கலவமஞ்ஞுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றன்னீள்கழல்
ஞலவுஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலவல்லாரவர்தொல்வினைதீருமே. (ஙிக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-மூல்லைவனேசுவரர்-தேவியார்-கரும்பனையாளம்மை.

(திருவாலவாய்-பண்-கௌசிகம்.)
திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவுரித்தீர்தியோர்த்தொட
ரூட்டமூன்றுடையாயுரைசெய்வனன்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையர
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (க)

மத்தயானையினீருரிமூடிய
வித்தனேயணியாலவாயாட்பணி
பொய்த்தவன்றவவேடத்தாஞ்சமண்
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. (உ)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந்
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியபேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (க)

ஓதியோத்தறியாவமணுதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (ச)

வையமார்புகழாயடியார்தொழுந்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டிழவுமமண்கையரைப்
பைய்யவாதுசெயத்திருவுள்ளமே. (ஞ)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (ட)

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழுந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கையரைவாதினிற்
செண்டடித்துழறத்திருவுள்ளமே. (ண)

அரக்கன்ரூன்கிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினேத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. (அ)

மாலுநால்முகனும்மறியாநெறி
யாலவாயுறையுமண்ணலேபணி
மேலவீணரைவெற்றரையரை
சாலவாதுசெயத்திருவுள்ளமே (கூ)

கழிக்கறைப்படுமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடையானைநல்கிடே. (ப)

செந்தெனமாலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணிகறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. (௰௫)

திருச்சிற்றம்பலம்.

(திருமழபாடி-பண்-கௌசிகம்.)

திருச்சிறறம்பலம்.

அங்கையாரழலன்னழகார்சடைக்
கங்கையான்கடவுள்ளிடமேவிய
மங்கையாளுறையும்மழபாடியைத்
தங்கையாற்றொழுவார்தகவாளரே. (க)

விதியுமாம்விளைவாமொழியார்த்தமதோர்
கதியுமாங்கிவாம்வகியாற்றமா
மதியுமாம்வலியாமழபாடியு
ணதியந்தோய்சடைநாதனற்பாதமே. (உ)

மூழவினுன்முதுகாடுறைபேய்க்கணக்
குழுவினுன்குலவுங்கையிலேந்திய
மழுவினுறையும்மழபாடியைத்
தொழுமினுந்துயரானவைதீரவே. (ங)

கலியினன்மறையான்கதியாகிய
மலியினன்மருவார்புரமூன்றெய்த
சிலையினன்சேர்திருமழபாடியைத்
தலியினல்வணங்கத்தவமாகுமே. (ச)

நல்விணப்பயனன்மறையின்பொருள்
கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப்
புல்லியேத்துமதுபுகழாகுமே. (ஞ)

நீடினாருலகுக்குயிராய்நின்று
ஆடினானெரிகானிடைமாநடம்
பாடினானிசைமாமழபாடியை
நாடினாக்கில்லைநல்குரவானவே. (ஸ)

மீன்வினரிடையாளொருபாகமாய்
மன்னிணுறைமாமழபாடியைப்
பன்னினரிசையால்வழிபாடிசெய்
துன்னினர்வினையாயினவோயுமே. (எ)

தென்னிலங்கையர்மன்னன்செழுவனை
தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை
யுன்னிலங்கவுறுபிணியில்லையே. (அ)

திருவினுயகனுஞ்செழுந்தாமரை
மருவினுறைதொழுதழன்மாண்பம
ருருவினுறையும்மழபாடியைப்
பரவினர்வினைபற்றறுப்பார்களே. (கூ)

நலியுநன்றறியாச்சமண்சாக்கியர்
வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே
மெலியுநம்முடன்மேல்வினையானவே. (ய)

மந்தமுந்துபொழின்மழபாடியு
ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம்
பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே. (யக)

திருச்சிற்றம்பலம்.

(நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-கௌசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

காலனாகிக்கரிந்துகண்ணீர்மல்கி
யோலமிவர்தமைநன்னெறிக்குய்ப்பதும்
வேதநாவினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (க)

நம்புவார்நமர்நாமநவிற்றினுல்
வம்புநாண்மலர்வார்மதுவெரப்பது
செம்பொனார்திலதம்மூலஞ்சொலா
தம்பனுமநமச்சிவாயவே. (உ)

தெக்குளார்வமிகப்பெருகித்தினந்
தக்குமாலைகுடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராத்தருவிப்பது
நக்கனுமநமச்சிவாயவே. (ங)

இயமன்தூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லரர்தமைநண்ணினு
னியமந்தானினைவார்க்கினியானென்றி
நயனனுமநமச்சிவாயவே. (ச)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவராயிடி
லெல்லாத்தீங்கையுநீங்குவரொன்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே. (ஞ)

மந்தரம்மன்னபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வதோற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே. (ட)

நரகமேழ்புகநாடினராயினு
முணாசெய்வாயினராயினுருத்திரர்
நிரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனுமநமச்சிவாயவே. (ண)

இலங்கைமன்னனெடுத்தவலிக்கன்மேற்
றலஞ்கொள்காலிரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணுமநமச்சிவாயவே. (த)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலர்ந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே. (ந)

கஞ்சிமண்டையர்கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலொன்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்டனமச்சிவாயவே. (ம)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையால்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (யக)

திருச்சிற்றம்பலம்.

ஆறாந்திருமுறை - முதற்பதிகம் - முகூ.

(திருத்தண்டலைநீணெறி - பண் - கௌசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

விரும்புந்திங்களுங்கங்கைபும்விம்மவே
சுரும்புறுந்தும்பியுஞ்சூழ்சடையார்க்கிடங்
கரும்புஞ்செந்நெலுங்காய்கமுகின்வள
நெருங்குந்தண்டலைநீணெறிகாண்மினே. (க)

இகழுங்காலனிதயத்துமென்னுளந்
திகழுஞ்சேவடியான்றிருந்தும்மிடம்
புகழும்பூமகளும்புணர்பூசுரர்
நிகழுந்தண்டலைநீணெறிகாண்மினே. (உ)

பரந்தநீலப்படரொளிவல்விடங்
கரந்தகண்டத்திலுள்ளருளும்மிடஞ்
சுரந்தமேதிதுறைபடிந்தோடையி
னிரந்ததண்டலைநீணெறிகாண்மினே. (ங)

நவந்தவெண்புந்தவளப்பொடியுமே
புவந்தமேனியிலுறையும்மிடஞ்
சிவந்தபொன்னுஞ்செழுந்தாளங்களு
நிவந்ததண்டலைநீணெறிகாண்மினே. (ச-ஞ-ஈ-ன)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
விலங்கலில்லடர்த்தான்விரும்புமிடஞ்
சலஞ்சிதஞ்சேர்ப்பிதரளமுஞ்சங்கமு
நிலங்கொண்டலைநீணெறிகாண்மினே. (அ)

கருவருந்தியினன்முகன்கண்ணனென்
றிருவருந்தெரியாவொருவன்னிடஞ்
செருவருந்தியசெம்பியன்கோச்செங்க
ணிருபர்தண்டலைநீணெறிகாண்மினே. (க)

கலவுசிவரத்தா ரிகையிலுங் பவ
குலவுமாட டாக்குழகனுறைவிடஞ்
சுலவுமாமதி லுஞ்சடைமாடமு
நிலவுந்தண்டலைநீணெறிதானன்மினே. (எ)

நீற்றர்தண்டலைநீணெறிநாதனைத்
தோற்றுமேன்மையர்தோணிபுரத்திலெ
ஞாற்றுஞானசம்பந்தன்றமிழ்வல்லார்
மாற்றில்செல்வர்மறப்பரிறப்பையே. (ஐ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ள

சுவாமிபெயர்-தினைநாதேசுவரர். தேவியார் குழற்கினியம்மை.

(திருவாலவாய-பண்-கௌசிகம்)

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
வையனேயருச்சலென்றருள்செய்யெனாட்
பொய்யராமமணாகொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (ஏ)

சித்தனேதிருவாலவாய்மேவிய
வித்தனேயருச்சலென்றருள்செய்யெனா
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (ஒ)

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்
சொக்கனேயருச்சலென்றருள்செய்யெனா
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (ஓ)

கிட்டனேதிருவாலவாய்மேவிய
வட்டமூர்த்தியனேயருச்சலென்றருள்
குட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (ஔ)

நண்ணலார்புரமூன்றெரியாலவா
யண்ணலேயருச்சலென்றருள்செய்யெனா
யெண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (க)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு
மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (சு)

செங்கண்வெள்விடையாய்திருவாலவா
யங்கணுவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல்
பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. (எ)

தூர்த்தன்வீரந்துலைத்தருளாலவா
யார்த்தபேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. (அ)

தாவினையன்றுனதியல்வகை
மேவினாய்திருவாலவாயாயரு
நீவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினன்றென்னன்பாண்டியற்காகவே. (கூ)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (ஙி)

அப்பலாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

(திருவாலவாய்-திருவிராகம்-பண்-கௌசிகம்.)

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநீர்படண்பனே
காடலாலவாயிலாய்கவலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (எ)

பட்டிசைந்தவல்குலாள்பாலையாளோர்பாகமா
வெட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாதிதென்னையே. (உ)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
கற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றதூற்கருத்தனீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்தமுன்னுரைப்பதென்முகம்மனே. (ஙு)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீமுழங்குழ
லதிரவீசியாடுவாயழகனீபயங்களீ
மதுரநீமலாளனீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. (ச)

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலுடன்பதொண்டிசெய்துபண்டுபின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (ஞ)

பொன்றயங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை
மின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதென்னியமமே. (ட)

ஆதியந்தமாயினாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளாய்சோதியாய்
நீதியந்தவாய்மையாற்கினாதருக்கினார்க்கலா
லோதிவந்தவாய்மையாலுணர்ந்தறைகலாகுமே. (எ)

கறையிலங்குகண்டனேகருந்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனுந்தோளடரவுன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலீர்
நிறையிலங்குநெஞ்சினீர்நினைப்பதேநியமமே. (அ)

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறுந்
தேவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகன்னுமாலுநின்
றூவணமளக்கிலார்துளக்குமெய்துவார்களே. (கூ)

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுன்னியக்கொளார்
கூற்றுதைத்தாளினூக்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநல்லைடேய். (அ)

போயதீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பிறை
லாயசொல்தின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீபுரவெண்ணுவார்கள்சிந்தையாயதேவரே. (ஆ)

திருச்சிறம்பலம்.

(திருவாணக்கா-திருவிராகம்-பண்-கௌசிகம்.)

திருச்சிறம்பலம்.

வாணக்காவல்வெண்மதிமல்குபுல்குவார்சடைத்
தேணக்காவிலின்மொழித்தேவிபாகமாயினு
ணீணக்காவிலண்ணலேயபபமாகவாழ்பவ
சோணக்காவல்வேண்டுவார்க்கேதுமேதடைலிலையே. (க)

சேறுபட்டதன்வயற்சென்றுசென்றுசேலுலா
வாறுபட்டநுண்டிறையாணக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரிலிபாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்வினைவெல்லவல்லரே. (உ)

தாரமாயமாதராடரேனுபாகமாயினு
வீரமாயபுன்சடையேற்றதிங்கள்சூடினு
ஞரமாயமார்புடையரக்காவிலண்ணலே
வாரமாய்வணங்குவார்வல்வினைகண்மாயுமே. (ங)

விண்ணினாருபுல்கியவீரமாயமால்விடைச்
சுண்ணவெண்ணீறுடலுற்சுலவுமேற்றுகையினு
னண்ணல்சேர்ந்நிலாமுழுமுதற்றுணைக்காவுகைதொழ
வெண்ணுவம்வண்ணம்வல்லவர்க்கேதுமொன்றுமிலையே. (ச)

வெய்யபாவங்கைவிடவேண்டுவீர்களாண்டீர்
மைகொள்கண்டன்வெய்யதீமாலையாடுகாதலான்
கொய்யவின்டதாண்மலர்க்கொன்றைதூன்றுசெல்வியெம்
மையன்மேயபொய்கைசூழ்வாணக்காவுசேர்மினே. (ஞ)

தானுமோர்வுசார்வுமுன்னையுமுட்குநன்மையும்
பேணுறுதிசெல்வமும்பேசநின்றபெற்றியா
ரூணும்பெண்ணுமாகியவானேக்காவிலண்ணலார்
காணுங்கண்ணுமூன்றுடைக்கறைமிடறனல்லனே. (சு)

கூரும்மாலேநண்பகற்கூடிவல்லதொண்டர்கள்
பேருமூருஞ்செல்வமும்பேசநின்றபெற்றியான்
பாரும்விண்ணுங்கைதொழப்பாயுங்கங்கைசெஞ்சடை
யாரநீரோடேத்திரைஞனக்காவுசேர்மினே. (எ)

பொன்னமல்குதாமரைப்போதுதாதுவண்டினம்
மன்னமல்குதண்பிறையானேக்காவிலண்ணலைப்
பன்னவல்லநான்மறைபாடவல்லதன்மையோர்
